## ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி

## எட்டாம் திருமொழி - விண்ணீல மேலாப்பு
## மேக விடு தூது

** விண்ணீல மேலாப்பு * விரித்தாற் போல் மேகங்காள்! *
தெண்ணீர் பாய் வேங்கடத்து * என் திருமாலும் போந்தானே? **
கண்ணீர்கள் முலைக்குவட்டில் * துளி சோரச் சோர்வேனை *
பெண்ணீர்மை ஈடழிக்கும் இது * தமக்கோர் பெருமையே 1

மாமுத்த நிதி சொரியும் * மாமுகில்காள்! * வேங்கடத்துச்
சாமத்தின் நிறம் கொண்ட * தாடாளன் வார்த்தை என்னே! **
காமத்தீ உள்புகுந்து * கதுவப்பட்டு இடைக் கங்குல் *
ஏமத்தோர் தென்றலுக்கு * இங்கிலக்காய் நான் இருப்பேனே 2

ஒளி வண்ணம் வளை சிந்தை * உறக்கத்தோடிவை எல்லாம் *
எளிமையால் இட்டென்னை * ஈடழியப் போயினவால் **
குளிர் அருவி வேங்கடத்து * என் கோவிந்தன் குணம் பாடி *
அளியத்த மேகங்காள்! * ஆவி காத்திருப்பேனே 3

மின்னாகத்து எழுகின்ற * மேகங்காள்! * வேங்கடத்துத்
தன்னாகத் திருமங்கை * தங்கிய சீர் மார்வர்க்கு **
என்னாகத்து இளங்கொங்கை * விரும்பித் தாம் நாள்தோறும் *
பொன்னாகம் புல்குதற்கு * என் புரிவுடைமை செப்புமினே 4

வான் கொண்டு கிளர்ந்து எழுந்த * மாமுகில்காள்! * வேங்கடத்துத்
தேன் கொண்ட மலர் சிதறத் * திரண்டேறிப் பொழிவீர்காள்! **
ஊன் கொண்ட வள்ளுகிரால் * இரணியனை உடல் இடந்தான் *
தான் கொண்ட சரிவளைகள் * தரும் ஆகில் சாற்றுமினே 5

சலம் கொண்டு கிளர்ந்தெழுந்த * தண்முகில்காள்! * மாவலியை
நிலம் கொண்டான் வேங்கடத்தே * நிரந்தேறிப் பொழிவீர்காள்! **
உலங்குண்ட விளங்கனி போல் * உள் மெலியப் புகுந்து * என்னை
நலங்கொண்ட நாரணற்கு * என் நடலை நோய் செப்புமினே 6

** சங்கமா கடல் கடைந்தான் * தண்முகில்காள்! * வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக் கீழ் * அடிவீழ்ச்சி விண்ணப்பம் **
கொங்கை மேல் குங்குமத்தின் * குழம்பழியப் புகுந்து * ஒரு நாள்
தங்குமேல் * என்னாவி தங்கும் என்றுரையீரே 7

கார் காலத்தெழுகின்ற * கார்முகில்காள்! * வேங்கடத்துப்
போர் காலத்தெழுந்தருளிப் * பொருதவனார் பேர் சொல்லி **
நீர் காலத்தெருக்கில் * அம்பழ இலை போல் வீழ்வேனை *
வார் காலத்தொரு நாள் * தம் வாசகம் தந்தருளாரே 8

** மத யானை போல் எழுந்த * மாமுகில்காள்! * வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்! * பாம்பணையான் வார்த்தை என்னே! **
கதி என்றும் தான் ஆவான் * கருதாது * ஓர் பெண் கொடியை
வதை செய்தான் என்னும் சொல் * வையகத்தார் மதியாரே 9

** நாகத்தின் அணையானை * நன்னுதலாள் நயந்துரை செய்
மேகத்தை * வேங்கடக் கோன் * விடு தூதில் விண்ணப்பம் **
போகத்தில் வழுவாத * புதுவையர் கோன் கோதை தமிழ் *
ஆகத்து வைத்துரைப்பார் அவர் * அடியார் ஆகுவரே 10

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**

---